# சாதாரணக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் **2019** ம் ஆண்டு மே மாதம் **31** ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை **11.00** மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

## பொருள் : 01

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 16 மாணிக்காபுரம் சாலையில் சீரான முறையில் குடிநீர் வருவதில்லை எனப் பொதுமக்கள் புகார் தெரிவித்தன் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டதில் மேற்படி சாலையில் 4 இன்ஞ் குழாய்க்கு பதிலாக 6 இன்ஞ் குழாய் பதித்து மாணிக்காபுரம் சாலையில் இராணி மருத்துவமனையிலிருந்து அம்மாபாளையம் சாலைப்பிரிவு வரை சுமார் 250மீ நீளத்திற்கு குழாய் பதிக்க பல்லடம் நெடுஞ்சாலைத் துறையிடம் அனுமதி பெற கடிதம் அனுப்பப்பட்டது. கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலைத் துறை, திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண் 464/2019/இ.வ.அ நாள் 14.03.2019ல் மேற்கண்ட இடத்தில் குடிநீர் குழாய் பதிக்கும் பொருட்டு பல்லடம் அவினாசி புளியம்பட்டி சாலையில் ம.நெ/166 கி.மீ. 0/6-2/2 மற்றும் 2/6-4/8 சீரமைத்தல் பணிக்கு ரூ.4,58,000 மற்றும் பல்லடம் பூமலூர் சாலை கி.மீ. 0/6 சீரமைத்தல் பணிக்கு ரூ.43,000 ஆக மொத்தம் ரூ.5,01,000 ஐ உதவி கோட்டப் பொறியாளர் என்ற பெயருக்கு வரைவோலையாக அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற இருப்பதாலும், Code of Conduct நடைமுறையில் உள்ளதால், இப்பணியினை உடனடியாக செய்ய இயலாத காரணத்தினாலும், பொது மக்களின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகையை ரூ.5,01,000 உதவி கோட்டப் பொறியாளர், பல்லடம் அவர்களுக்கு வரைவோலையாக வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியானது பொது மக்களின் குடிநீர் அத்தியாவசியப் பணியாக இருப்பதால், தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, ரூ.5,01,000/-ஐ உதவி கோட்டப் பொறியாளர், பல்லடம் அவர்களுக்கு வரைவோலையாக வழங்க அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 02

வார்டு எண் 12 வடுகபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பாராளுமன்ற தேர்தல் - 2019 க்கு வாக்குசாவடி அமைக்க உள்ளதால், வகுப்பறை மேற்கூரைகள் மற்றும் சாய்தளங்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.0.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

2.தேர்தல் பணி என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.C.தேவராஜ் அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக பணி மேற்கொண்டதையும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 03</u>**

வார்டு எண் 08 பனப்பாளையம் டி.இ.எல்.சி ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் பாராளுமன்ற தேர்தல் - 2019க்கு வாக்குசாவடி அமைக்க உள்ளதால், வாக்குசாவடி பராமரிப்பு மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.0.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

2.தேர்தல் பணி என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.C.தேவராஜ் அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக பணி மேற்கொண்டதையும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 04</u>**

வார்டு எண் 08 பனப்பாளையம் டி.இ.எல்.சி ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் பாராளுமன்ற தேர்தல் - 2019க்கு வாக்குசாவடி அமைக்க உள்ளதால், குடிநீர் அல்லாத பிற தேவைகளுக்காக குளிக்க மற்றும் கழிப்பறை வசதிக்காக குழாய் அமைப்பு ஏற்படுத்தி தரவும், மின்வசதி ஏற்படுத்தி தரவும் மற்றும் சாய்தளங்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.0.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

2.தேர்தல் பணி என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.C.தேவராஜ் அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக பணி மேற்கொண்டதையும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 05</u>**

நகராட்சிக்கு சொந்தமான மாதப்பூர் கிராமத்தில் உள்ள உரமாக்கும் மையத்தில், நுண்ணுயிர் உரமாக்கும் மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட இடம் தனி நபர்களுக்கு சொந்தமானது என வழக்கு

தொடர்ந்துள்ளதால், அப்பகுதிக்கான கண்காணிப்பு கேமரா CCTV அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.0.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணியை உள்ளூர் விலைப்புள்ளி பெற்று ஒப்படைப்பு பணியாக பணி மேற்கொண்டதையும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 06**

பல்லடம் நகராட்சியில் உரக்கிடங்கு அமைக்க வழங்கப்பட்ட இடமான மாதப்பூர் கிராமம் க.ச.எண் 872 ல் உரக்கிடங்கு பணி மேற்கொள்ளும் பொழுது அருகில் உள்ள திரு.ஜெகநாதன் மற்றும் சிலர்களால் திருப்பூர் மாவட்ட இரண்டாவது கூடுதல் நீதிமன்றத்தில் OS.No: 234/2018, மற்றும் IA.No: 1652/2018, IA.No: 1653/2018 வழக்கு தொடரப்பட்டது .மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக வக்காலத்து Written statement, Counter Statement தயார் செய்து தாக்கல் செய்ததற்கு திரு.பி.முருகேசன், எம்.ஏ.பி.எல் அரசு வழக்கறிஞர் திருப்பூர், அவர்களுக்கு ரு.10000 வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட வழக்கு கட்டண தொகை ரு.10000/ க்கு தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கலாம்.

**பொருள் 07**

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு ஹிட்டாச்சி வாகனம் மூலம் குப்பை கிடங்கில் மண் கொட்டுதல் பணிக்கு 02.04.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | தொகை ரு |
|---|---|---|
| 1 | பி.என்.கே. அசோசியேட்ஸ்<br>( ஒரு மணி நேரத்திற்கு) | ரு1400/ |
| 2 | அம்மன் எர்த் முவர்ஸ்<br>( ஒரு மணி நேரத்திற்கு) | ரு.1450 |
| 3 | ஸ்ரீ லட்சுமி எர்த் முவர்ஸ்<br>( ஒரு மணி நேரத்திற்கு) | ரு1480 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் பி.என்.கே. அசோசியேட்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் 08**

பல்லடம் நகராட்சியில் உரக்கிடங்கு அமைக்க வழங்கப்பட்ட இடமான மாதப்பூர் கிராமம் க.ச.எண் 872 ல் உரக்கிடங்கு பணி மேற்கொள்ளும் பொழுது திருமதி.சுமதி என்பவர் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் WP.No 5664/2019 ல் வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு.பி.ஆனந்த் அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் , சென்னை அவர்கள் ஆஜராகி வழக்கை தள்ளுபடி செய்தார். மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணமாக ரு.15000/ வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட வழக்கு கட்டணத்தொகை ரு.15000/ க்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கலாம்.

தனி அலுவலர்
பல்லடம் நகராட்சி